தேதி : 25.12.2011

## மணியாய் விளையும் ஜீரோ பட்ஜெட் நெல்

ஜீரோ பட்ஜெட்' விவசாய முறை என்றாலே... இடுபொருட்களாக பயன்படுத்தப்படும் ஜீவாமிர்தம் உள்ளிட்ட அமிர்தங்கள் அக்னி அஸ்திரம் உள்ளிட்ட அஸ்திரங்கள் ஆகியவை முக்கியமாக கவனத்தில் வந்து நின்றுவிடும். இவையில்லாமல் ஜீரோ பட்ஜெட் இல்லை.ஆனால், "இவை மட்டுமே ஜீரோ பட்ஜெட் இல்லை" என்கிறார் நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல் பகுதியைச் சேர்ந்த சக்திவேலு.

"அமிர்தங்கள் மற்றும் அஸ்திரங்கள் மூலமே சிறந்தப் பலன்கள் கிடைக்கும் என்றாலும், காற்றுத் தடுப்பு வேலிகள், இயந்திரங்கள் பயன்படுத்தாமை, உயிர்மூடாக்கு... என 'வேளாண் வித்தகர்' சுபாஷ் பாலேக்கர் சொல்லும் அத்தனை வழிமுறைகளையும் கடைபிடித்து, முழுமையாக ஜீரோ பட்ஜெட் வேளாண்மை செய்யும்போது... கூடுதல் பலன் என்பது கண்கூடு" என்று சொல்லும் சக்திவேலு, பாலேக்கர் சொல்லும் பெரும்பாலான ஜீரோ பட்ஜெட் தொழில்நுட்பங்களையும் கடைபிடித்து அரை ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்து வருகிறார்.இவருக்கு மொத்தம் ஆறு ஏக்கர் நிலமிருக்கிறது. அதில் வீட்டிற்குப் பக்கத்தில் அரை ஏக்கரும் தனியாக ஐந்தரை ஏக்கரும் இருக்கிறது.

2007-ம் வருஷம் ஈரோட்டில் 'பசுமை விகடன்' நடத்திய 'ஜீரோ பட்ஜெட்' பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பிறகு, 'இயற்கைக்கு மாறணும்'என்கிற எண்ணம் வந்ததாகக் கூறுகிறார். பாலேக்கர் சொன்ன அத்தனை விஷயங்களையும் செய்து பார்க்க வேண்டும் என்று முடிவு செய்ததாக கூறுகிறார்.

உம்பளாச்சேரிதான் சிறந்தது!

இந்தியாவில் நிறைய வகையான நாட்டு மாடுகள் இருந்தாலும், உம்பளாச்சேரி ரகத்தோட சாணத்தில்தான் நுண்ணுயிரிகள் அதிகம்என்று பாலேக்கர் சொல்கிறார். அதனால்தான் கொஞ்சம்கூட கலப்பில்லாத, சுத்தமான உம்பளாச்சேரி இரகத்தில் இரண்டு பசுக்களையும் ஒரு காளையையும் வாங்கியுள்ளார். சோதனை முயற்சியாக வீட்டுப் பக்கத்தில் இருந்த அரை ஏக்கரில் ஜீரோ பட்ஜெட் முறையில விவசாயம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்.

காற்றுத் தடுப்பு வேலி!

இந்த நிலத்தைத் தேர்ந்தெடுத்ததுக்கும் காரணம் காற்றோட வேகத்தைக் குறைக்கணுங்கிறதுக்காக, நிலத்தோட தெற்கு, மேற்கு பக்கங்களில் மரங்களை வளர்க்க வேண்டும் என்று பாலேக்கர் கூறினார்.

இயற்கையாவே அந்த நிலத்தில் அந்த இரண்டு திசையிலும் தேக்கு, தென்னை, மா, சூபாபுல், வேம்புனு நெருக்கமாக மரங்கள் இருந்தது. அது வண்டலும் களியும் கலந்த மண்.



ஜீரோ பட்ஜெட் நெல் வயலில் சக்திவேலு

திரட்சியான நெல்மணிகள்

2008-ம் வருடம் அந்த நிலத்தில் இரசாயனம் போட்டு உளுந்து சாகுபடி பண்ணியிருக்கிறார். உளுந்தை அறுவடை பண்ணிட்டு தக்கைப்பூண்டு விதைகளைத் தெளித்து ஐந்து மாதம் வரைக்கும் நிலத்திலேயே விட்டுவிட்டார். நன்றாக தளதளவென்று வளர்ந்து நின்றது. அது நல்ல உயிர்மூடாக்கு. அதன் வெப்பத்தால் நிலம் வெடிக்காமலும் பாதுகாக்கும். அதனால், நுண்ணுயிர்கள் அழியாமல் இருக்கறதோடு, மண்ணில் ஈரப்பதம் இருந்து கொண்டே இருக்கும்.

நோய்கள் இல்லை!

செப்டம்பர் மாதம் சம்பா நடவுக்காக அரை ஏக்கர் நிலத்தைத் தயார் செய்ய ஆரம்பித்தார். நிலத்தில் தண்ணீர் கட்டி, ஐந்து நாள் கழித்து 150 கிலோ தொழுவுரம், 50 கிலோ ஆட்டு எருவும் போட்டிருக்கிறார். ஆனால், பதினைந்து நாளாகியும் தக்கைப்பூண்டு மக்கவேயில்லை.

அதுவரைக்கும் ரசாயனம் போட்டிருந்ததால் மக்க வைக்கிற நுண்ணுயிர்கள் நிலத்தில் இல்லை. அதனால், பவர் டில்லர் வைத்து மடக்கி விட்டதாக கூறுகிறார். அடுத்து 100

லிட்டர் ஜீவாமிர்தம் கலந்து தண்ணி கட்டி ஒற்றை நாற்று முறையில சம்பா ரகத்தை நடவு செய்துள்ளார். தொடர்ந்து 15 நாளுக்கு ஒரு தடவை ஜீவாமிர்தம் மட்டும்தான் கொடுக்கிறார். பயிருக்கு எந்த நோயும் வரவதில்லை. பூச்சிகளும் தாக்குவதில்லை.

ஊடுபயிராக உளுந்து!

45-ம் நாள் 100 லிட்டர் தண்ணீரில் 5 லிட்டர் புளித்த தயிரைக் கலந்து தெளித்தார். அதனால் நன்றாக கதிர் பிடிக்க விளைந்திருந்தது. அறுவடைக்கு, பத்து நாள் முன்னயே ஊடுபயிராக உளுந்து விதையைத் தெளித்து விட்டேன். அறுவடை பண்ணிய போது அரை ஏக்கரில் 12 மூட்டை கிடைத்தாக கூறுகிறார். இது இரசாயன சாகுபடியைவிட மூன்று மூட்டை குறைவுதான். இதை எதிர்பார்த்திருந்ததால் ஏமாற்றம் இல்லை. ஆனால் உளுந்தில் 120 கிலோ மகசூல் கிடைத்தது. இது நல்ல மகசூல். வழக்கமாக 90 கிலோதான் கிடைக்கும்.

உழவே இல்லை!

அடுத்த போகத்தில் திரும்பவும் தக்கைப்பூண்டு தெளித்துவிட்டு வளர்ந்ததும் தண்ணீர் கட்டினார். மண்ணில் நுண்ணுயிர்கள் இருந்ததால், பவர் டில்லருக்கு வேலை வைக்காமல் தானாவே மக்கிவிட்டது தக்கைப்பூண்டு. அடுத்தடுத்த போகத்தில் 15 மூட்டை வரை சம்பா நெல்லும் 120 கிலோ உளுந்தும் கிடைத்தது. இப்போது உழவே ஓட்டாமல்தான் சாகுபடி செய்கிறார்.நிலத்தில் உழவை நிறுத்திட்டு ஜீவாமிர்தம் அதிகமாக விடுவதால் நிறைய நுண்ணுயிர்களும், மண்புழுக்களும் பெருகியிருக்கிருக்கிறது. அதேமாதிரி, வயலில் நிறைய நண்டு, நத்தையெல்லாம் தங்கியிருக்கிறது. அதனால் இயற்கையாகவே உயிர்சுழற்சி நடக்கிறது. பறவைகள் அதிகமாக வருவதால் பூச்சிப் பிரச்சனையும் இல்லை. உயிர்மூடாக்கு போடுவதால், அதிகமாக களைகளும் வருவதில்லை' என்ற சக்திவேலு...அடுத்தபடியாக ஐந்தரை ஏக்கரில் ஜீரோ பட்ஜெட் முறையில்தான் இனி விவசாயம் பண்ணப் போவதாக உற்சாகமாகச் சொல்லி விடைகொடுத்தார்.

தொடர்புக்கு

சக்திவேலு

செல்போன் : 97906-28466

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன்